1967 நவம்பர் 25]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கடந்த மாதம் போட்ட குழுவிலே கூட நமது மாநில சர்க்காரைக் கலந்து ஆலோசிக்காமல்தான் மூன்று பேர்களை அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதை நான் வன்மையாகக் கண்டித்துச் சொல்லி விட்டு வந்திருக்கிறேன். அடுத்த முறை போடுகின்ற குழுவில் நிச்சயமாக நமது மாநில சர்க்காரின் ஒப்புதலையும் அங்கிகாரத்தையும் பெற்றுத் தான் போடுவதாக அவர்கள் உறுதி அளித்து இருக்கிறார்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, சில பத்திரிகைகளில் ஆபாசமாக எழுதுவதும் சித்திரங்கள் போடுவதும் நடைபெற்று வருகிறதே, அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பத்திரிகைகளிலோ அல்லது வேறு எந்த வகையிலுமோ ஆபாசம் இருக்குமானால் இ.பி.கோ. 292-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப் போலீசாருக்கு அதிகாரம் இருக்கிறது.

மாவட்ட விளம்பர அலுவலகங்கள்

* 441 **வினா—திரு. க. இராமமூர்த்தி :** மதிப்பிற்குரிய அரிஜன நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விளம்பரத் துறையின் கீழ் உள்ள, மாவட்ட விளம்பர அலுவலங்களுக்கு மத்திய சர்க்கார் மானியம் ஏதேனும் வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

பரோலில் விடப்பட்ட கைதிகள்

* 422 **வினா—திரு. டி. மார்டின் :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மத்திய சிறையிலிருந்தும், திருச்சி மத்திய சிறையிலிருந்தும் 1—4—1967 முதல் 1—7—1967 வரை பரோலில் விடப்பட்ட கைதிகள் எத்தனைபேர்?

(இ) அவர்களில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மதுரை மத்திய சிறையிலிருந்து—16.

திருச்சி மத்திய சிறையிலிருந்து—32.

(இ) ராமநாதபுரம்மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 11.